Deposition of Witness
(Chapter XXV BNSS )
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.
Case No. CC . No. 14/2018
DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS – 3

| Name: | ராஜமாணிக்கம் | Calling: | சிறப்பு உதவி ஆய்வாளர், ஓய்வு |
|---|---|---|---|
| Father's Name: | முனிரத்தினம் | Religion: | |
| Village: | ஆம்பூர் | Age: | 63 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of BSA 2023 Dated : 18.06.2026 நேரம் : 12.32 PM

( 2 ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை, குவிமுச 317 ன் படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

அ.சா.3 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

மணல் திருட்டு சம்மந்தமாக எத்தனை மணிக்கு காவல் நிலையத்தில் இருந்து சென்றோம் என்றால் காவல் நிலையத்தில் இருந்து 13.45 மணிக்கு சென்றோம். எத்தனை மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால் 14.30 மணிக்கு சென்றோம். முதல் தகவல் அறிக்கையில் 3 ம் வரிசை பி யில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.02.2017, 15.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து அன்றைய தினமே நீதிமன்றத்திற்கு வழக்கு கோப்பை அனுப்பிவைத்துவிட்டோம் என்றால் சரிதான். மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் படி கைது குறிப்பாணையில் எதிரியிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட வழக்கு சொத்துக்குறித்து எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைப்பற்றுதல் மசரில் நேரம்

திருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக சம்பவயிடத்தை அடையாளம் காட்ட மாதிரி வரைப்படமோ, பார்வை மகசரோ தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு யார் முதலில் சென்றதது என்றால் மூன்று பேரும் ஒன்றாக தான் சென்றோம். 1ம் எதிரி தனபாலை எங்கள் மூன்றுபேரில் யார் முதலில் பிடித்தது என்றால் நாங்கள் மூன்று பேரும் தான் சம்பவயிடத்தில் பிடித்தோம். சம்பவயிடத்தில் எத்தனை மணிக்கு 1ம் எதிரியிடம் இருந்து வழக்கு சொத்தை கைப்பற்றினோம் என்றால் 15.00 மணிக்கு கைப்பற்றினோம். 15.00 மணிக்கு தான் எதிரியை கைது செய்தோமா என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசரிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சிகள் இருவரிடமும் சம்பவயிடத்தில் தான் கையொப்பம் வாங்கினோம் என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு நான், முருகன் , கோபி தவிர வேறு எந்த காவலரும் வரவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தை கணினி மூலம் பதிவு செய்த திருமதி. அருள்மொழியை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் டிரேக்டரின் பதிவு எண் குறிப்பிட்டு ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். 1 ம் எதிரி கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இரண்டாம் எதிரி போலிசார் ஆகிய உம்மை கண்டதும் தப்பித்து ஓடிவிட்டதாக ஒப்புதல் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தலைமை காவலர் முருகன், கோபி ஆகியோர் 1ம் எதிரி எங்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவோ அதில் அவர்கள் கையொப்பம் செய்ததாகவோ என்று வாக்குமூலத்தில் எதுவும் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நாங்கள் கைப்பற்றிய டிரேக்டர் மற்றும் டிரைலர் ஆகியவற்றின் உரிமையாளர் யார் என்றால் மூவேந்தன் என்பவர். டிரேக்டர் மற்றும் டிரைலர் மூவேந்தனுக்கு சொந்தமானது என்று சொல்வதற்கு இவ்வழக்கில் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இவ்வழக்கில் கைப்பற்றிய 1 யூனிட் மணலை வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தற்கு அவரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்துள்ளோமா என்றால் இல்லை. படிவம் 91 ல் சாட்சிகளிடம் கையொப்பம் வாங்கி உள்ளேனா என்றால் இல்லை. 1ம் எதிரி சாட்சிகள் முன்னிலையில் எந்த வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரி நான் நேரத்தில் சொல்லும் இடத்தில் மணல் எதுவும் ஓட்டிவரவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிரிக்கு வாகனம் ஓட்ட தெரியாது என்றாலும் வழக்கிற்காக அவர் வாகனம் ஓட்டிவந்ததாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. மணலை

உண்மையிலேயே கைப்பற்றியிருந்தால் வட்டாச்சியரை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்திருப்பேன் என்றாலும் அதனால் மணல் எதுவும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. 1ம் எதிரியை காவல் நிலையத்திற்கு வரவைத்து புள்ளியல் விவரத்திற்காக ஒரு தவறான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதன்மை விசாரணையில் கூறியது போல 1ம் எதிரியை சொல்லும் இடத்தில் சொல்லும் நேரத்தில் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. புள்ளியல் விவரத்திற்காக 1ம் எதிரியின் மீது போடப்பட்ட இவ்வழக்கில் 2ம் எதிரியை நாங்கள் சேர்த்துள்ளோம் என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாண்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எங்களால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) ராஜமாணிக்கம்

SRIPATHI K

SRIPATHI K
2026.06.22
10:16:17
+0530